1972 மார்ச் 13]

குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைத்தல்.

சென்னை மாநகரின் சில பகுதிகளில் குடிசைகள் தீப்பிடித்துக்கொள்வதை தாற்காலிகமாகத் தீர்த்து வைத்த போதிலும், குடிசை வாழ்பவர்களின் இடர்பாடுகளைத் தீப்பிடிக்காத குடியிருப்புகள் நிலையாகத் தீர்த்துவிடவில்லை. தாழ்ந்த பகுதிகளில் உள்ள குடிசைகள் ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதால் அவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ரூ. 25-ம் தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 40-ம் மாநகராட்சியும், மாநில அரசும் கொடுக்க வேண்டி வந்தது. இடர்ப்பாடு பெரிதும் நீங்கிவிடாத போதிலும், தொடர்ந்து செலவு ஏற்பட்டு வருகிறது. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் இப்பிரச்சினையின் விளிம்பைத்தான் தொட்டுள்ளன எனலாம். இவ்வாறு எல்லாம் ஏற்பட்டுள்ளதை எண்ணிப் பார்த்தும் அரசுக்குத் தொடர்ந்துசெலவு ஏற்படுவதைக் கருதியும், தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதியின் கீழ் அமைந்துள்ள தமிழ் நாடு அரசு இப்பிரச்சினையை பெரியஅளவில் தீர்த்து வைப்பதென 1970 செப்டம்பரில் முடிவு செய்தது. என்னென்ன கால அளவுக்குள் எத்தனை குடிசைப் பகுதிகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டு வாரியம் பணியாற்றி வருகிறது. குடிசை மேம்பாடு செய்வதை விட குடிசையை மாற்றி கல் கட்டிடம் கட்டுவதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. சென்னை மாநகரில் குடிசை மாற்று வேலைத் திட்டத்தை மும்முரப்படுத்துவது அரசின் உத்தேசம் ஆகும். 7 ஆண்டு கால அளவுக்குள் சென்னை மாநகரில் குடிசைப் பகுதி முழுவதையும் மாற்றி அமைப்பது என அரசு குறிக்கோள் நிச்சயித்துள்ளது. இத்தகைய பெரிய பிரச்சினையைச் சமாளிப்பதற்கு தனிப்பட்ட வாரியம் ஒன்று 1970 செப்டம்பரில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இருக்கின்ற குடிசைப்பகுதிகளை மாற்றுவதற்கும், புதிய குடிசைப்பகுதிகள் தோன்றுவண்ணம் தடுப்பதற்கும் தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அவசியமான அதிகாரங்கள் அளிக்கும் வகையில் 1971ஆம் ஆண்டில் தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு—நீக்கு) சட்டம் இயற்றப்பட்டது. கடந்த காலத்தில் குடிசையில் வாழ்பவர்களுக்கு வேறிடம் கொடுக்காமலேயே வலுக்கட்டாயமாக அவர்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு செய்வது சட்டத்தில் தடுக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களோ சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரோ, காவலர்களோ குடிசையில் வாழ்பவர்களை அகற்ற விரும்பினால், அவர்களை அகற்றுவதற்கும் அவர்களுக்கு வேறு இடவசதி அளிப்பதற்கும் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தை அணுகலாம். வேறிடம் எதுவும் கொடுக்கப்படாமல்

தங்கள் குடிசையிலிருந்து தாங்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் படுவோமோ என்ற அச்சம் இப்போது குடிசைவாழ் மக்களுக்கு இல்லை. குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடம் அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தங்களுடைய நலனைக் கட்டிக் காப்பதற்காகவே இந்த வாரியம் அமைக்கப்பட்டுள்ளதென அவர்கள் கருதுகின்றனர்.

வாரியத்தின் அமைப்பு.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் முதன்முதலாக குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின் தலைவர் அரசு அதிகாரி அல்லாத ஒருவர் ஆவர். இவர் சட்டப் பேரவை உறுப்பினராகவும் இருக்கிறார். குடிசை வாழ்வோர் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் தலைவராய் இருந்தவர் என்ற முறையில் இவருக்கு இருக்கும் பரந்த அனுபவம் காரணமாகவே இவ்வாரியத்திற்கு இவர் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த 15 ஆண்டுக் காலமாக, குடிசைவாழ் மக்களுடன் இவர் நெருங்கிப்பழகி வருகிறார். அவர்களுடைய பிரச்சினைகள் எல்லாம் இவருக்கு நன்கு தெரியும். எந்த வகையில் அணுகினால் வாரியத்தின் நோக்கம் ஈடேறும் என்பதை இவர் நன்கு அறிந்துள்ளார். அரசின் மூத்த செயலாளர்கள் பலர் இந்த வாரியத்தில் உறுப்பினராய் இருக்கின்றனர். தொழிலாளர் துறை, கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை, வருவாய்த்துறை, சமூகநலத்துறை, சுகாதாரம் குடும்ப நலத்துறை ஆகியவற்றின் செயலாளர்கள் இதன் உறுப்பினர்களாய் இருக்கின்றனர். சென்னை மாநகராட்சிப் பொறுப்பு அதிகாரியும், நகர அமைப்பு இயக்குநரும், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவரும் இதன் உறுப் பினராய் உள்ளனர். மேலும், தலை சிறந்த கட்டடக்கலை நிபுணர் ஒருவரும் வாரியத்தில் இடம் பெற்றுள்ளார். திட்டங்களை நிறைவேற்றுவதில் தமது அரிய ஆலோசனைகளை இவர் நல்குவார். தென் சென்னை, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்களும் முக்கியமான உள்ளூர் தலைவர்களும் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாய் இருக்கின்றனர். குடிசைப் பகுதி மாற்று வாரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது நேரடி மேற்பார்வையில் வைத்துள்ளார் என்பதிலிருந்து குடிசைப் பகுதி மாற்றுப் பணிக்கு இந்த அரசு எந்த அளவு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை உணரலாம்.

வாரியத்தின் நோக்கங்கள்.

வாரியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன —

(1) குடிசை வாழ் மக்கள் வெளியேற்றப்படும்போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான் இந்த வாரியத்தின் வேலையாகும்: அரசின்